பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

25 12 2025 THURSDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உத்தரபிரதேசம் மாநிலம், லக்னோவில் உள்ள தேசிய நினைவிடத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று திறந்து வைக்கிறார்.

2. போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றங்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் காவல்துறையினர் உட்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

4. பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி உள்ளிட்ட வடமாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் பனிப்பொழிவு நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. விளையாட்டுத் துறையின் உயரிய விருதான மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருதிற்கு இந்திய ஆடவர் ஹாக்கி அணியின் துணை கேப்டன் ஹர்திக் சிங் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல் பிஹாரி வாஜ்பேயின் 101-வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, உத்தரபிரதேசம் மாநிலம், லக்னோவில் உள்ள தேசிய நினைவிடத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றுகிறார்.

65 ஏக்கர் பரப்பளவில் 230 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த நினைவிடம், நாட்டிற்கான சேவை, தலைமைப்பண்பு, கலாச்சார உணர்வு ஆகியவற்றை பிரதிபலிக்கும் சின்னமாக அமைந்துள்ளது.

முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயி, சியாமா பிரசாத் முகர்ஜி, தீன்தயாள் உபாத்யாயா போன்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில், இந்த நினைவகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் 98 ஆயிரம் சதுரஅடி பரப்பளவில் நவீன அருங்காட்சியகமும் அமைக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

போதைப்பொருள் கடத்தல், இணையதள குற்றங்கள், ஆள்கடத்தல் போன்றவைகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசு

மேற்கொண்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம், பஞ்ச்குலாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், சில ஆண்டுகளுக்கு முன்னதாக நாட்டில் சட்டம் ஒழுங்கு, நக்சல் தீவிரவாதம், எல்லைப்பகுதிகளில் தீவிரவாதிகள் ஊடுருவல் போன்ற சவால்கள் உள்நாட்டிற்கு பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தது என்று கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, ஆட்சிப் பொறுப்பேற்ற 10 ஆண்டுகளில் இதுபோன்ற அச்சுறுத்தல்கள் களையப்பட்டுள்ளதாக கூறினார்.

உள்நாட்டு பாதுகாப்பிலும் மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக, பஞ்ச்குலாவில் 3 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தையும் திரு. அமித் ஷா திறந்து வைத்தார்.

>>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின் கீழ் செயல்படுத்தப்படும் இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் வெற்றியை ஒப்புக் கொண்டதற்காக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்திக்கு நன்றி

தெரிவித்துக் கொள்வதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

8 முதல் 9 மாதங்களில் 30 ஆயிரத்திற்கும் அதிகமான ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளது, வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கான மத்திய அரசின் நடவடிக்கைகளை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று தெரிவித்துள்ள திரு. ராகுல் காந்தியின் சமூகவலைதளப் பதிவை திரு. அஸ்வினி வைஷ்ணவ் பகிர்ந்துள்ளார்.

மத்திய அரசு மேற்கொண்டு வரும் திட்டங்கள், இந்தியாவை உற்பத்தி சார்ந்த பொருளாதார நாடாக உருவெடுக்க செய்துள்ளதாக திரு. அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கு அடித்தளம் அமைக்கும் வகையில், கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் தொழிலாளர்களுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத் திறன் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் திறன் மேம்பாட்டு அமைச்சகத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்

அடிப்படையிலான சர்வதேச பொருளாதார நடவடிக்கைகளுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார்.

அதிகரித்து வரும் தொழில்நுட்ப தேவைகளுக்கு ஏற்ப, நிறுவனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில், அது சார்ந்த பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்தார்.

>>>>>><<<<<

இயேசு பிரான் அவதரித்த நாளான கிறிஸ்துமஸ் பண்டிகை இன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது

இதையொட்டி குடியரசு தலைவர், மக்களவைத் தலைவர் தலைவர்கள் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், மனிதகுலத்தின் நலனுக்காக இயேசு பிரான் செய்த தியாகத்தை நாம் ஒவ்வொருவரும் நினைவுகூர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த பண்டிகை அமைதி, நல்லிணக்கம், சமத்துவம் மற்றும் சேவை மனப்பான்மையை மக்களிடையே உருவாக்கட்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், மகிழ்ச்சி, அமைதி மற்றும் அன்பு நிரம்பிய பண்டிகையாக கிறிஸ்துமஸ் திகழ்வதாக தெரிவித்துள்ளார்.

இந்தப் பண்டிகை, ஒவ்வொருவருக்கும் வெற்றி மற்றும் வளங்களை சேர்க்கட்டும் என்று அவர் கூறியுள்ளார்.

வாட்டிகன் நகரில் நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனையில் போப் ஆண்டவர் லியோ கலந்து கொண்டார்.

தமிழகத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

சென்னை சாந்தோம் தேவாலயம், பெசண்ட் நகர் வேளாங்கண்ணி மாதா ஆலயம், எழும்பூர், பாரிமுனை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ள தேவாலயங்களிலும் சிறப்பு திருப்பலிகள் நடைபெற்றன

தூத்து யில் உள்ள புகழ்பெற்ற பனிமயமாதா போராலயம், நாகை மாவட்டம், வேளாங்கணண்ணி மாதா பேரலயம் உள்ளிட்ட அனைத்து தேவாலயங்களிலும் நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனைகளில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

>>>>>><<<<<

ரஷ்யாவுடனான அமைதி ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களுக்கு தீர்வு காண்பது குறித்து, அந்நாட்டுடன் அமெரிக்கா ஆலோசனை நடத்த வேண்டும் என்று யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான அமைதி ஒப்பந்தம் குறித்த 20 அம்ச திட்டத்தை இறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. ஜெலன்ஸ்கி கூறினார்.

>>>>>><<<<<

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் காவல்துறையினர் உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

ரோந்துப் பணியின் போது, காவல்துறையினர் சந்தேகத்திற்கு இடமான நபரை கைது செய்ய முயன்றபோது இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த இடத்தில் தடயவியல் நிபுணர்கள் மற்றும் விசாரணை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<

தாய்லாந்து - கம்போடியா இடையேயான மோதலில் தெய்வங்களின் உருவச் சிலைகள் மீது சேதம் ஏற்படுத்துவது, அவமதிப்பது போன்ற செயல்கள், மக்களுக்கு வேதனையை அளிக்கும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த மோதல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில், இந்து மத கடவுள்களின் உருவச் சிலைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதற்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

மக்களின் மதம் சார்ந்த கலாச்சார பாரம்பரியத்தின் ஒரு அங்கமாக உள்ள இந்த சிலைகளுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<

கனமழை மற்றும் சூறாவளி குறித்த வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையை அடுத்து, அமெரிக்காவின் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளதாக கலிஃபோர்னியா மாகாண ஆளுநர் திரு. Gavin Newsom தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், கலிஃபோர்னியா மாகாணத்தின் தென் பகுதியில் கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வடகிழக்கு கலிஃபோர்னியாவில் சூறாவளி காரணமாக மின்தடை ஏற்படக்கூடும் என்பதால் அப்பகுதி மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

கனமழைக்கான எச்சரிக்கையை அடுத்து, 250 பேர் கொண்ட மீட்புக் குழுவினர் தயார் நிலையில் உள்ளதாக திரு. Gavin Newsom தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

ஜம்மு கஷ்மீர், லடாக், ஜில்ஜித், பல்டிஸ்தான், முஷாபராபாத், ஹிமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி, உத்தரப்பிரதேசம், பீகார் மற்றும் உத்ராகண்டில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் பனிப்பொழிவு நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசம், ஒடிசா, மேற்குவங்கம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இம்மாதம் 28ஆம் தேதிவரை பனிப்பொழிவு நீடிக்கும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

>>>>>><<<<<

விளையாட்டுத் துறையின் உயரிய விருதான மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருதிற்கு இந்திய ஆடவர் ஹாக்கி அணியின் துணை கேப்டன் ஹர்திக் சிங் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்திய ஒலிம்பிக் சங்க துணைத் தலைவர் ககன் நரங் தலைமையிலான தேர்வு குழு விருதுக்கான வீரர்களின் பெயர் பட்டியலை நேற்று இறுதி செய்தது.

யோகாசன பிரிவில் ஆர்த்தி பால், துப்பாக்கி சுடுதலில் மெஹுலி கோஷ், ஜிம்னாஸ்டிக் பிரிவில் பிரனதி நாயக்,பேட்மிண்டன் வீராங்கனைகள் திரேஸா ஜாலி, காயத்ரி கோபிசந்த் 24 வீரர்களின் பெயர்களும் அர்ஜுனா விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

விளையாட்டில் சிறப்பான திறனை வெளிப்படுத்தும் வீரர்களுக்கு மத்திய விளையாட்டு அமைச்சகத்தால் ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

>>>>>><<<<<

விஜயவாடாவில் நடைபெற்று வரும் தேசிய சீனியர் பேட்மிண்டன் போட்டியில், உன்னத்தி ஹுடா, தன்வி சர்மா, ரௌனக் சவுஹான், சன்ஸ்கர் சரஸ்வத் ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<

சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் சண்டிகர் அணி இன்று ஹரியானாவை எதிர்கொள்கிறது. இப்போட்டி காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

பிற்பகல் மணி 2.30-க்கு நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் உத்தரபிரதேச அணி – உத்ராகண்ட் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>END<<<<<